குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி..எண்.9/2024

ம.சா. 2

2025–ம் ஆண்டு ஜீலை மாதம் 15–ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 02–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.சுஜிதா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரவணன் | தொழில் | |
| தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.36 மணி,

Complainant Saravanan present. Advocate Mr.P.Sanchukumar present for Complainant. Accused Prabakaran present. Advocate Mr.Geminishankar present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. ஆஜர் எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் ஆஜர் எதிரி முத்துநாயக்கன்பட்டியில் மருந்து கடை நடத்தி வருகிறார், நானும் அதே ஊரைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி எனக்கு நேரடியாக பழக்கமா என்றால் ஆமாம், 10 வருடமாக அதே ஊரில் மருந்துகடை நடத்தி வருவதால் அவருடைய கடைக்கு போகவர எனக்கு பழக்கம். நான் நகை கடை நடத்தி வருகிறேன். நான் என்னுடைய தொழிலை பற்றி எனது வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் மற்றும் புகார் வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நகை கடை தொழிலை தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. நான் ஆஜர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் என்னுடைய நகை கடையில் வைத்து கொடுத்தேன். எனது நகை கடையில் கண்காணிப்பு கேமரா இருக்கிறதா என்றால் இல்லை. ஆஜர் எதிரிக்கு யார் முன்னிலையில் பணம் கொடுத்தேன் என்றால் முத்துநாயக்கன்பட்டியை சேர்ந்த நிரஞ்சன்பிரபு என்பவர் முன்னிலையில் கொடுத்தேன்.

3. மேற்படி ரூ.4,00,000/– ஐ ஆஜர் எதிரிக்கு கடனாக கொடுத்து எத்தனை காசோலைகளை பெற்றுக் கொண்டேன் என்றால் ஒன்று. பதிலறிவிப்பில் 2 காசோலைகள் கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அதை பற்றி புகார் மனுவில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி ரூ.4,00,000/–

ஐ தன்னுடைய மருந்துகடையை விரிவாக்கம் செய்வதற்காக கேட்டாரா என்றால் சரிதான்.

4. 20.12.2023 ம் தேதி அன்று ஆஜர் எதிரிக்கு நான் பணம் கொடுத்தேனா என்றால் இல்லை, 15.10.2023 ம் தேதி அன்று பணம் கொடுத்தேன். ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுத்த தேதியில் அவர் என்னிடம் பணம் கேட்டாரா என்றால் இல்லை, பணம் கொடுப்பதற்கு 4 நாட்களுக்கு முன்பாக என்னிடம் கேட்டு இருந்தார். அந்த சமயத்தில் கைவசம் பணம் இல்லாததால் 15.10.2023 ம் தேதி அன்று பணத்தை ஆஜர் எதிரிக்கு கொடுத்தேன். மேற்படி சங்கதியை வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் மற்றும் புகார் வாக்குமூலம் ஆகியவற்றில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

5. ம.சா.ஆ.1 இவ்வழக்கு காசோலையில் தொகையை நான் பூர்த்தி செய்தேனா என்றால் இல்லை ஆஜர் எதிரி ஏற்கனவே பூர்த்தி செய்து எடுத்து வந்து என் முன்னிலையில் கையொப்பம் செய்து கொடுத்தார். ம.சா.ஆ– 1 ல் மற்ற விபரங்களை பூர்த்தி செய்து இருக்கும் பேனாவின் மையும், கைபொப்பத்தின் பேனாவின் மையும் வெவ்வேறாக இருக்கிறது என்றால் ஆஜர் எதிரி ஏற்கனவே பூர்த்தி செய்து வந்த காசோலையை என் முன்னிலையில் நான் கொடுத்த பேனாவினால் கையொப்பம் செய்தார்.

6. ம.சா.ஆ.1ல் இருக்கும் மற்ற விபரங்களை நிரப்புவதற்கு பலவருடங்களுக்கு முன்னால் கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பு கொடுத்த காசோலையை பூர்த்தி செய்து தற்போது இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 11.56 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.